1993 மார்ச் 30] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

தி.மு.க. வின் கோவை மாநாட்டுப் பந்தலில் ஏற்பட்ட தீ விபத்திற்காக நான் வருந்துகிறேன்.

பிற்பகல் 12–15

ஆனால் அச்சம்பவத்தை அரசியலாக்கி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பழி சுமத்த முயற்சிப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றேன். எங்கள் அரசைப் பொறுத்தமட்டில் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்ற நியதிக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. உண்மையிலேயே அச்சம்பவம் விபத்து அல்ல; விஷமச் செயல் என்று விசாரணையில் தெரிய வந்தால் அந்த நாச வேலைக்குப் பொறுப்பானவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்த அரசு தயங்காது என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இந்த வழக்கு கிரைம் பிராஞ்ச் சி.ஐ.டி.-க்கு மாற்றப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். கிரைம் பிராஞ்ச் சி.ஐ.டி.-ஆல் திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் ஏற்பட்ட தீ விபத்தை மட்டுமல்ல, பேரணியின்போது நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள், பொதுச் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதாரங்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சொந்தமான சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதாரங்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் செய்த நாச வேலைகள் இத்தனையும் விசாரிக்கப்படும். தவறு செய்தவர்களுக்கு உரிய தண்டனையும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . . .

(ஆ) கள்ளக்குறிச்சியில் டாக்டர் அம்பேத்கார் சிலை உடைக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை இந்த நேரத்தில் விவாதம் ஆக்க முடியாது. உட்காருங்கள். கள்ளக்குறிச்சி தாலுக்கா அலுவலகம் முன்னர் அம்பேத்கார் சிலை ஒன்று உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவம் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள் (குறுக்கீடு). அதிலே பல உறுப்பினர்கள் இங்கே இல்லை. இருக்கிற உறுப்பினர்கள் திரு. செ. கு. தமிழரசன், திரு. டி. எம். ரங்கராஜன், திரு. ஜெயக்குமார் ஆகியோர் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்கள். அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரக் கேட்டுக் கொள்கிறேன். திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இளம்வழுதி உட்காருங்கள். நான் உங்களுக்கு வாய்ப்பு அளித்து, பதிலும் முழுமையாக வழங்கியிருக்கிறபோது வேண்டாம் (குறுக்கீடு) இந்த ஸ்பெஷல் மென்ஷனில் கிடையாது. (குறுக்கீடு) ஸ்பெஷல் மென்ஷனில் திரும்பத் திரும்பப் பேச முடியாது. அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத் தந்த வாய்ப்புதான் (குறுக்கீடு) வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசிக் கொண்டே இருந்தால் எப்படி? நான் திரு. தமிழரசனை அழைத்து விட்டேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். இன்னொரு உறுப்பினரை நான் கூப்பிட்ட பிறகு நீங்கள் நின்று கொண்டிருப்பது சரியல்ல.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான நமது இந்தியாவின் அரசியல் சட்டத்தை வடித்துக் கொடுத்தவர் பாபா சாஹேப் அம்பேத்கார் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளம்வழுதி, தயவு செய்து வேண்டாம். நான் அனுமதி அளிக்காமல், உங்களை உட்காருங்கள் என்று சொன்னதற்குப் பிறகும் உங்களுடைய இஷ்டத்திற்கு எழுந்து நின்று கொண்டு பேசுவது முறையல்ல. அது மற்ற உறுப்பினர்களுடைய உணர்வுகளைப் பாதிக்குமானால் அவையைச் சுமுகமாக நடத்துவதற்கு வாய்ப்பாக அமையாது. (குறுக்கீடு) நீங்கள் கேட்டீர்கள். அதற்குப் பதிலும் வந்து விட்டது. அந்த அளவோடு இந்தப் பிரச்சினை முடிகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். அந்த மாதிரி முறையை வைத்திருக்கிறோம். (குறுக்கீடு) நீங்கள் இதிலே விளக்கம் கேட்க வேண்டுமென்றால் விதி 55-இல் கொடுத்து இருக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. உட்காருங்கள். நீங்கள்தானே பதில் கேட்டீர்கள். பதில் கொடுத்து விட்டார்கள். (குறுக்கீடு) உங்களை யாரும் பதில் கேட்கவில்லையே. உட்காருங்கள். உட்காரவில்லை என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். அவையை நடத்த வேண்டும். மணி 12.15 ஆகிவிட்டது. (குறுக்கீடு) திரு. கா.ப. பட்டாபிராமன்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் விதியைச் சொல்கிறார். நீங்களும் ஏதாவது விதி இருந்தால் சொல்லுங்கள்.

திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிற போது இன்னொரு உறுப்பினர் அவருடைய பேச்சுக்கு இடைஞ்சலாகவோ அல்லது அதைத் தடுக்கின்ற முறையிலோ நடந்து கொண்டால் அந்த உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று விதி 86 மிகத் தெளிவாக இருக்கிறது. எனவே இந்த நிலைமையைப் பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதைத்தான் சொன்னேன். இன்னொரு உறுப்பினரை அழைத்து அவர் பேசிக் கொண்டிருக்கிறபோது நீங்கள் நின்று கொண்டு பேசுவது, அவரைப் பேசவிடாமல் தடுக்கின்றீர்கள்; அவர் உரிமையைத் தடுக்கின்றீர்கள் என்று வரும். (குறுக்கீடு) திரு. இளம்வழுதி உட்காருங்கள். திரு. செ. கு. தமிழரசன் பேசுங்கள் (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

(அ) கோவையில் தி.மு.க. மாநாட்டுப் பந்தல் எரிந்து போனது குறித்தும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சம்பவங்கள் குறித்தும்—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளியில் தி.மு.க. கட்சித் தலைவரும், இங்கே அவைக்குள் தி.மு.க. கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினரும் வேண்டுமென்றே, தெரிந்தே தவறான தகவல்களைக் கொடுத்து மக்களைத் திசை திருப்ப முயற்சி செய்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். தி.மு.க. தலைவர் வெளியிட்ட அறிக்கையிலும் (குறுக்கீடு) இங்கே சட்டமன்ற உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் பேசுகின்றபோதும் தி.மு.க. மாநாட்டுப் பந்தலுக்கு மின் இணைப்பே கொடுக்கப்படவில்லை இந்த தீ விபத்து நடந்த நேரத்தில் என்று சொன்னார்கள், ஆனால் இப்பொழுது நான் இங்கே தெரிவித்த தகவலின்படி 1—3—1993–1 ஆம் தேதியே மின் இணைப்பு வேண்டுமென்று அவர்கள் விண்ணப்பித்து, 20 ஆம் தேதியே அந்த மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுத்தது மட்டுமல்லாமல், 3 நாட்கள் 22, 23, 25 ஆகிய நாட்களில் Assistant Electrical Inspector. P.W.D. அங்கே போய், அங்கே இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்து, அவர்கள் தணிக்கை செய்து 11 குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் குறைபாடுகளை சரி செய்யவில்லையென்றால் மின் கசிவு ஏற்படும், விபத்து ஏற்படும், சரி செய்யுங்கள் என்று சொல்லியும்கூட அவர்கள் அதை நிவர்த்தி செய்யாமல் விட்டுவிட்டனர். இந்தக் கடிதங்களின் நகல்கள் ஒப்பந்தக்காரருக்கும், செயற்பொறியாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, தெரிந்தே தவறான தகவலை கொடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடு).

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே என்ன சொல்லப் போகிறீர்கள் ?

திரு. இளம்வழுதி : முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், ஆனால் அன்றையதினம் மின்சார சப்பளையே இல்லையென்று அந்த மின் துறை அதிகாரிதான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் முதல் அமைச்சர் அவர்கள் மறுத்தார். உட்காருங்கள் (குறுக்கீடு) அதைத் தான் முதல் அமைச்சர் மறுத்தார். அப்படித்தவறான தகவலைச் சொல்லியிருக்கிறீர்கள் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சபையை அமைதியான முறையில் நடத்துவதற்கு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைப்பு தருகிறார்களா, விதிமுறைகளுக்கு ஏற்ப இந்தச் சபையை நடத்த வேண்டுமென்று விரும்புகிறாரா? அந்த விதிமுறையை மீறி உறுப்பினர் வேண்டுமென்றே இந்தச் சபையில் குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருப்பது சரிதானா என்பதை உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த ஸ்பெஷல் மென்ஷனில் மேற்கொண்டு விவாதம் வேண்டாம். இதை நீங்கள் தெரிவித்து விளக்கத்தை அரசாங்கத்தின் தரப்பில் தெரிவித்திருக்கிறார்கள். நீங்கள் மேற்கொண்டு வேறு ஒரு சந்தர்ப்பத்திலே, வேறு சில விளக்கங்கள் தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம். (குறுக்கீடுகள்) இப்போது வேண்டாம் (குறுக்கீடுகள்). நீங்கள் சொல்வதை மறுக்கக் கூடாதா? (குறுக்கீடு) பரிதி நீங்கள் ஒரு கருத்தை சொல்லியிருக்கிறீர்கள், மின் இணைப்பே கொடுக்கப்படவில்லை என்று, அதை மறுக்கக் கூடாதா? அதை முதல் அமைச்சர் ஆதாரப் பூர்வமாக இந்தத் தேதியில் அனுமதி கேட்டிருக்கிறார்கள். இந்தத் தேதியிலிருந்து மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அவர்களுக்குத் தெரிவித்த சில குறைபாடுகளினால் மின் கசிவு ஏற்படும் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு). அவர்கள் பதிலிலே சொல்லாமல் என்ன செய்வது, நீங்கள் சொன்னால் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமா? உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள், இதிலே வேண்டாம், (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: உங்கள் கட்சியினுடைய துணைப் பொதுச் செயலாளராக இருக்கிற..(குறுக்கீடு)

1993 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ராஜூ, நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு). பரிதி, நீங்கள் உட்காரவில்லையென்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். இன்னொரு உறுப்பினரைத் தடுக்க முடியாது. தயவுசெய்து உட்காருங்கள் (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பு கொடுத்து இருக்கிறேன் (குறுக்கீடு) உட்காருங்கள். நிதியமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இளம்வழுதி இப்பொழுது பேசிய எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது. (குறுக்கீடு) ராஜூவும் உட்கார வேண்டும். இளம்வழுதியும் உட்கார வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வினியோகம் செய்யப்பட்டதை பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மகாநாட்டுக்கு மின்சார, இணைப்பு வேண்டுமென்று 1-3-1993 அன்றே கேட்டிருக்கிறார்கள். 20 ஆம் தேதியே மின்சார இணைப்பு தரப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் (குறுக்கீடு) பரிதி இது சரியல்ல.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குப் பிறகு அதிகாரிகள் போய் அங்கே ஆராய்ந்து பார்த்து, இன்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே பொறுப்பான மின்சாரத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் எல்லாம் இந்த அறிக்கைகளை கொடுத்திருக்கிறார்கள் யாரேனும் ஒரு பொறுப்பற்ற அதிகாரி அறிக்கை விட்டிருப்பாரேயானால், அவர் மீது தகுந்த நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புறேன். (குறுக்கீடு) அப்படி அறிக்கை வெளியிட்டவரே தி.மு. கழகத்தை சேர்ந்தவராக இருக்கக் கூடும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே வேண்டாம். அவருக்குச் சொன்னதுதான். இதிலே வேண்டாம். தமிழரசன் பேசட்டும். தமிழரசன் முடியுங்கள். இதிலே வேண்டாம். பழனிசாமி. இது, ஸ்பெஷல் மென்ஷன். அவரை உட்காரச் சொல்லுங்கள். பதில் வந்த பிறகு இதிலே வேண்டாம். தமிழரசன் பேசட்டும். (குறுக்கீடுகள்) ஸ்பெஷல் மென்ஷனிலே இது வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. தமிழரசன்.

[1993 மார்ச் 30

பிற்பகல் 12-25

திரு. இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே . , .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இளம்வழுதி இது சரியில்லை. நான் திரு. தமிழரசனைப் பேச அழைத்துக்கொண்டிருக்கிறேன். திரு. பழனிசாமியைக் கூட உட்காரச் சொன்னேன். அவரும் உட்கார்ந்து விட்டார். (குறுக்கீடுகள்.) இது சரியில்லை. (குறுக்கீடு) திரு. பரிதி இளம்வழுதி, நீங்கள் தெரிவிக்க வேண்டிய கருத்தைத் தெரிவித்து விட்டீர்கள். அதற்கு பதிலும் தெரிவித்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி வேண்டாம், இதிலே வேண்டாம். (குறுக்கீடுகள்) வேறு ஏதாவது ஒழுங்கு முறையைப்பற்றிச் சொல்கிறீர்களா? சொல்லுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இன்றைக்கு அவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் திரு. பழனிசாமி அவர்களை நீங்கள் அனுமதித்து, இது விவாதமாக வருமேயானால் ஒவ்வொன்றிலும் இவர்கள் கேள்வி கேட்க வேண்டி வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இல்லை. வேறு ஏதாவது ஒழுங்குமுறை பற்றித் தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம் என்றுதான் நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இப்போது விவாதம் தொடர்கிற வகையில் கேள்வியைக் கேட்டு, திருப்பி பதிலை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. இதைப்பற்றி அவர் பேசக் கூடாது. (குறுக்கீடு) இதைப்பற்றி அவர் பேசக் கூடாது. சபையினுடைய ஒழுங்குமுறையைப் பற்றி ஏதாவது தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம், இல்லை என்றால் வேண்டாம். திரு. தமிழரசன்.

(ஆ) கள்ளக்குறிச்சியில் டாக்டர் அம்பேத்கார் சிலை உடைக்கப்பட்டது குறித்து—தொடர்ச்சி.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியிலே அண்ணல் அம்பேத்கார் சிலை உடைக்கப்பட்ட ஒரு முக்கியமான சம்பவம் குறித்து இந்த

அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் என்னைப் பேச அழைத்தீர்கள். நீங்கள் என்னைப் பேச அழைத்ததிலிருந்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. இளம்வழுதி அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களும் தொடர்ந்து என்னைப் பேசவிடாமல், தடை செய்து கொண்டிருக்கிறார்கள்.

(திரு. இளம்வழுதி அவையை விட்டு வெளியேறினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. தடை செய்ய மாட்டார்கள். (குறுக்கீடு) அது இல்லை என்று சொல்லி விட்டேன். (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி தடை செய்யவில்லை என்று நான் சொல்லி விட்டேனே. நானே சொல்லிவிட்டேன். திரு. பழனிசாமி தடை செய்யவில்லை. (குறுக்கீடுகள்) உங்களுக்காக நான் சொல்லி விட்டேன். (குறுக்கீடு) திரு. பழனிசாமி தடை செய்யவில்லை. தடை செய்யவில்லை என்று சொன்னதற்குப் பிறகு என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) உங்களுடைய பாதுகாப்புக்காக நானே வந்திருக்கிறேன்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச விடாமல் இடையூறு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று வேண்டுமானால் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இல்லை என்று நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) திரு. தம்புசாமி, அமருங்கள். (குறுக்கீடுகள்) அவர் உங்களுக்கு இடையூறும் செய்யவில்லை, தடையும் செய்யவில்லை. எனவே அந்தப் பிரச்சினையை விட்டு விட்டு உங்கள் கள்ளக்குறிச்சிப் பிரச்சினையைச் சொல்லுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றிப் பேசவேண்டாம். நீங்கள் உங்கள் கள்ளக்குறிச்சி பற்றிச் சொல்லுங்கள். அந்தப் பிரச்சினைக்குச் செல்லுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் அரசியல் சட்டத்தை வகுத்துத் தந்தவர் பாபாசாகிப் அண்ணல் அம்பேத்கார் அவர்கள். 43 ஆண்டுக் காலமாக, உலகத்தாலும், இந்தியாவிலே உள்ள அனைத்துப் பிரிவினராலும் பாராட்டப்பட்டு, புகழப்பட்டுக்கொண்டிருக்கிற, மிகக் குறைந்த அளவில் திருத்தங்கள் செய்யப்பட்ட போற்றுதலுக்குரிய அரசியல் சட்டத்தை உருவாக்கித் தந்த மிகப் பெரிய அரசியல

[திரு. செ. கு. தமிழரசன்] [1993 மார்ச் 30

மேதை, சட்ட மேதை அண்ணல் அம்பேத்கார் அவர்கள். அதுமட்டுமல்ல. இந்தியாவிலே இருக்கிற 22 கோடி ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் ரட்சகராகவும், வணங்குகிற தெய்வமாகவும் போற்றப்பட்டுக் கொண்டிருப்பவர் அண்ணல் அம்பேத்கார் அவர்கள். எனவேதான் நம்முடைய இந்தியப் பாராளுமன்ற வளாகத்தில் வேறு எந்தத் தலைவருக்கும் இல்லாத அளவுக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் ரட்சகர் என்று பெயர் பொறித்த ஒரு சிலையை நம்முடைய பாராளுமன்றமே பாராளுமன்ற வளாகத்தில் வைத்திருக்கிறது. அப்படிப்பட்ட, ஒப்புயர்வற்ற அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய சிலையை கள்ளக்குறிச்சியிலே சில சமூக விரோதிகள் கடந்த சில தினங்களுக்கு முன்னாலே தாக்கி உடைத்திருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்றால் அந்தப் பகுதியிலே அபிராமி திரையரங்கம் என்ற ஒரு திரையரங்கு இருக்கிறது. அந்தத் திரையரங்கில் இந்தச் சம்பவத்திற்கு சில தினங்களுக்கு முன்னாலே தாழ்த்தப்பட்ட மக்கள் சிலர் திரைப்படம் பார்ப்பதற்காகப் போய் இருக்கிறார்கள். அங்கே போய் அவர்கள் இடம் பிடித்து விட்டு வந்த பிறகு சிறிது நேரம் கழித்துப் போகிற போது அந்த இடத்தில் வேறு சிலர் அமர்ந்திருந்ததால் ஒரு வாக்குவாதம் ஏற்பட்டிருக்கிறது. அந்த வாக்குவாதத்திற்குப் பிறகு அந்தத் திரையரங்கின் அதிபர், அதாவது அந்தத் திரையரங்கின் உரிமையாளர் அந்த தாழ்த்தப்பட்ட மக்களை அழைத்து, நீங்கள் என்ன இந்தத் திரையரங்கையே விலைக்கு வாங்கி விட்டீர்களா, இடம் பிடித்தால் அது உங்களுக்குச் சொந்தமா என்று கேட்டு அந்த அலுவலக அறையிலேயே கட்டிப்போட்டு அடித்திருக்கிறார். இந்தச் செயலைச் செய்தவர் அந்தத் திரையரங்கின் அதிபர், அந்தத் தொகுதியினுடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கேசவலு என்பவர். இதற்குப் பின்னால் இதோடு விட்டுவிடாமல் இவர்கள் எல்லாம் காவல் நிலையத்திற்குப் போய், எங்களை இந்தத் திரையரங்கிலே கட்டி வைத்து அடித்தார்கள், நடவடிக்கை எடுங்கள் என்று மறுநாள் அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் புகார் தந்திருக்கிறார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

எங்கள் பெயரிலேயா புகார் தந்திருக்கிறீர்கள் என்று கேசவலுவும், அவரோடு பாண்டியனும் ஆக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஒரு அணி திரண்டு 2,000 பேருக்கு மேலே அணி திரண்டு போய் பஸ் நிலயைத்தில் இருக்கிற அண்ணல் அம்பேத்கார் சிலையை உடைத்து இருக்கிறார்கள். அந்த சிலை சில மாதங்களுக்கு முன்னாலேதான், அவர்களுடைய தோழமைக் கட்சியின் தலைவராக இருந்து கொண்டிருக்கிற வி.பி. சிங் அவர்கள் திறந்து வைத்தது. ராம்விலாஸ் பாஸ்வான் அவர்கள் வருகை தந்து, வி. பி. சிங்-கும், பாஸ்வான் அவர்களும் இவர்களுடைய தோழமைக் கட்சித் தலைவராலே திறந்து வைக்கப்பட்ட அந்தச் சிலையை திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் கேசவலு, பாண்டியன் ஆகியோ

ருடைய தலைமையிலே 2 ஆயிரம் பேர் போய் சேர்ந்து உடைத்திருக்கிறார்கள். இதனால் அந்தப் பகுதியிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களிடையே ஒரு பதட்ட நிலைமை உருவாகியிருக்கிறது. மிகப் பெரிய அச்சம் உருவாகியிருக்கிறது. இதுவரையிலும் அவர்கள் கைது செய்யப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் பேரில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த அச்சத்தைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பிற்பகல் 12.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சியில் உள்ள திரையரங்கு ஒன்றில் 12-3-1993 அன்று நடைபெற்ற சம்பவம் தொடர்பாக ஜாதி இந்துக்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கும் இடையே தொடர்ந்து பல விரும்பத்தகாத வன்முறைச் சம்பவங்கள் நடந்துள்ளன. இவை குறித்து 12-3-1993 முதல் 17-3-1993 வரை கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் 6 வழக்குகளும், சங்கராபுரம் காவல் நிலையத்தில் 1 வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளன. திரை அரங்கில் இடம் பிடிப்பதில் ஏற்பட்ட சிறு தகராறு ஜாதி அடிப்படையில் வன்முறைச் சம்பவங்கள் நிகழக் காரணமாக இருந்துள்ளது. இதன் தொடர் நிகழ்ச்சியாக கள்ளக்குறிச்சி கச்சேரி சாலையில் உள்ள சட்டமேதை அம்பேத்கார் அவர்களின் திரு உருவச் சிலை ஜாதி இந்துக்களால் 13-3-1993 அன்று சேதப்படுத்தப்பட்டது. விருத்தாசலம் கோட்ட ஆட்சித் தலைவர் கள்ளக்குறிச்சி சென்று 15-3-1993 அன்று ஒரு அமைதிக் குழுக் கூட்டம் கூட்டினார். அக்கூட்டத்தில் ஜாதி இந்துக்கள் மட்டுமே கலந்து கொண்டனர். ஆதி திராவிடர்கள் அதைப் புறக்கணித்தனர். எனவே, மீண்டும் 17-3-1993 அன்று அக்கூட்டம் நடத்தப்பட்டது. அதில் ஜாதி இந்துக்களின் பிரதிநிதிகள் 42 பேரும், ஆதி திராவிடர்களின் பிரதிநிதியாக ஒருவரும் கலந்து கொண்டனர். ஆதி திராவிடர்களின் பிரதிநிதி கேட்டுக் கொண்டதற்கிணங்க அமைதிக் குழுக் கூட்டம் 21-3-1993 அன்று தள்ளி வைக்கப்பட்டது. பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடத்துவதற்காக அக்கூட்டம் 24-3-1993 அன்று ஒத்தி வைக்கப்பட்டது. 24-3-1993 அன்று தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைதிக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் சின்னசேலம் சட்டமன்ற உறுப்பினர், விருத்தாசலம் கோட்ட ஆட்சித் தலைவர், திருக்கோவிலூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோர் பங்கு கொண்டார்கள். இந்த அமைதிக் குழுக் கூட்டத்தில் 12 பேர் ஜாதி இந்துக்கள் தாழ்

பிலும், 11 பேர் ஆதி திராவிடர்கள் தரப்பிலும் கலந்து கொண்டார்கள். இந்தக் கூட்டத்தில் இரு தரப்பினருக்கும் இடையே ஒரு சுமுகமான உடன்பாடு ஏற்பட்டது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட இரு தரப்பின் 23 பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு நிரந்தர அமைதிக் குழு அமைப்பது என்றும், அம்பேத்கார் சிலையை விரைவிலேயே சீர் செய்து வைப்பது என்றும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பொது மக்களின் உதவியுடன் நிவாரணம் வழங்குவது என்றும், சிலை உடைப்பு மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் நேரடியாக ஈடுபட்டவர்களைத் தவிர மற்றவர்களை விடுவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், அமைதிக் குழுவின் முடிவுகளை செயல்படுத்த 5 நபர்களைக் கொண்ட சிறப்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. அமைதிக் குழுக் கூட்டத்தில் இறுதியில் கூட்டத்தில் கலந்து கொண்ட இரு தரப்பினர் அனைத்து பிரதிநிதிகளும் நடந்துவிட்ட கசப்பான நிகழ்ச்சிகளை மறந்துவிட்டு நல்லிணக்கத்துடன் அமைதி காப்போம் என்றும், வருங்காலத்தில் இது போன்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் ஏதும் நிகழாதவாறு பார்த்துக் கொள்வதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வோம் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். சேதம் அடைந்த சுட்டமேதை அம்பேத்கார் அவர்களின் சிலையும் சரி செய்யப்பட்டு 27-3-1993 அன்று மீண்டும் நிறுவப்பட்டது.

தற்போது இரு தரப்பினர்க்கும் இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் முற்றிலுமாக களையப்பட்டுள்ளன. பூரண அமைதி நிலவுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு பிரச்சினையையும் எழுப்ப வேண்டுமென்று மேலூரிலே நடைபெற்ற ஒரு வெடிகுண்டு சம்பவத்தைப் பற்றிச் சொல்லியிருந்தார்கள். சொன்னவர்கள் அனைவரும் போய் விட்டார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்கிறேன் என்று தயாராகவே இருந்தார்கள். ஆனால் அவர்கள் எழுப்புவதற்கே இயலாத அளவுக்குப் போய் விட்ட காரணத்தால் அப்பிரச்சினை இத்துடன் விட்டுவிடப்படுகிறது.

4. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன். இருக்கையில் இல்லை. எழுப்பப்படவில்லை என்று கருதப்படுகிறது.